## தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009

**இணைப்பு: 11**

# திருக்குறள் போட்டி
# (விசேட மேற்பிரிவு- 13 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 01.07.1996 க்குப்பின்)

## அதிகாரம் 40 - கல்வி

1. குறள்: **கற்க கசடுஅறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக** (391)

பொருள்: கற்பதற்குரிய நல்ல நூல்களை ஐயத்திற்கு இடம் இல்லாதவாறு கற்கவேண்டும். பின்னர் அவ்வாறு பெற்ற கல்வி சொல்லித்தந்த வழிகளை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.

2. குறள்: **கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடுஅல்ல மற்றை யவை** (400)

பொருள்: கல்வியே ஒருவருக்கு அழிவே இல்லாத பெருமைக்குரிய செல்வமாகும். மண், பொன் முதலிய ஏனையவை செல்வங்கள் அல்ல.

## அதிகாரம் 56 - கொடுங்கோன்மை

3. குறள்: **கொலைமேற் கொண்டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு**
**அல்லவை செய்தொழுகும் வேந்து** (551)

பொருள்: அறவழி கடந்து முறையில்லாத செயல்களைத் தொடர்ந்து செய்து மக்களுக்குத் துன்பம் தரும் அரசுத் தலைவன் கொலைசெய்வதைத் தொழிலாகக் கொண்ட ஈவு இரக்கமற்ற கொலைகாரனைவிடக் கொடியவன் ஆவான்.

4. குறள்: **நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்** (553)

பொருள்: ஒவ்வொருநாளும் நாட்டில் நடைபெறுகின்ற நன்மை தீமைகளைஆராய்ந்து நீதி செய்யாத அரசன் நாளுக்குநாள் தன் அரசாட்சியை இழந்துவிடுவான்.

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tele: 02 882403051 or 0419.255 625E-mail:asogt.tc@gmail.com Web: www.kalappai.org

5. குறள்: அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

பொருள்: கொடுங்கோல் ஆட்சியினால் துன்புற்ற குடிமக்கள் அதைப் பொறுக்க முடியாமல் விடுகின்ற கண்ணீர் அந்த அரசனின் ஆட்சி என்னும் செல்வத்தை அழித்துவிடும் படையாகும்.

## அதிகாரம் 98 பெருமை

6. குறள்: மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் (973)

பொருள்: சிறந்த பண்பு இல்லாதவர்கள் உயர்ந்த பதவிகளில் இருந்தாலும் பெரியவர்கள் ஆகமாட்டார்கள். கீழ் மட்டத்தில் இருந்தாலும் இழிந்த செயல்களைச் செய்யாதவர்கள் தாழ்ந்தவர்களாக மாட்டார்கள். அவர்கள் உயர்ந்தவர்களே.

7. குறள்: பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து (978)

பொருள்: பெருமையான குணம் கொண்டவர்கள் எப்போதும் பணிவுடையவர்களாகவே இருப்பார்கள். ஆனால், சிறுமைக் குணம் கொண்டவர்கள் எப்போதும் தற்புகழ்ச்சியே செய்வார்கள்.

## அதிகாரம் 99 - சான்றாண்மை

8. குறள்: ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை (985)

பொருள்: ஒரு செயலைச் செய்து முடிப்பவரது ஆற்றல் என்பது அதற்குரியவர்களைப் பணிந்து தம்முடன் சேர்த்துக்கொள்ளுதலாகும். அதுவே சான்றோர்கள் தமது பகைவரின் பகைமையை அழிக்கப் பயன்படுத்தும் கருவி ஆகும்.

9. குறள்: சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல் (986)

பொருள்: ஒருவரின் பெருமை நிறைந்த குணத்தை அறிவதற்கான உரைகல் எதுவென்றால், தம்மைவிடத் தாழ்ந்தவர்களிடத்திலும் தமது தோல்வியை ஏற்றுக்கொள்ளும் அவரின் மனப்பக்குவமே ஆகும்.

10. குறள்: இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு (987)

பொருள்: தமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையையே செய்ய வேண்டும். இல்லையென்றால் சால்பு எனப்படும் பெருமைக்குணம் ஒருவருக்கு இருந்து என்ன பயன்? எதுவுமே இல்லை.